சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–16.05.2022

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் வைகாசி மாதம் 06–ஆம் நாள் (மே திங்கள் 20–ஆம் நாள்:–20.05.2022) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒம்) R.அய்யம்மாள்,
நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சியில் அம்ரூத் 2.0 – 2022–23 (AMRUT-2.0) திட்டத்தின் கீழ், இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.19–இல் அமைந்துள்ள விஸ்வன்குளம் (Ward -A, Block-14, TS No.14/1) நீர்நிலையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.90.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளன.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Improvement works such as Desilting of pond, Strengthening of bund and Providing Street light, Foot path, Light and seating arrangements at Viswankulam (Ward -A, Block-14, TS No.14/1) in Chinnamanur Municipality | 90.00 |
| | **மொத்தம்** | **90.00** |

மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கான உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1423/2022/இ1)
2.நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் மேற்படி பணிகளுக்கான மதிப்பீடு ரூ.90.00 இலட்சத்தினை முழுமான்யமாக வழங்க வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 44 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) கீழ் திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நகரில் உள்ள நச்சுத் தடை தொட்டி (Septic Tank ) கழிவு நீரை கால்வாயில் விடுதல் அற்ற நகரமாக ODF++ அறிவிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளை, பொது மக்கள் தெரிவிக்கும் பொருட்டு தினசரி நாளிதழில் அறிவிப்பினை வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.14700/–ஐ ESS PUBLICATION என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்:** 45 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ், சின்னமனூர் நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக சின்னமனூர் நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக அறிவிக்கவும், அதற்கான மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், குப்பையில்லா நகராட்சி (Garbage Free City 3 Star) சான்றிதழ் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆட்சேபனை மற்றும் ஆலோசணைகளை பொது மக்கள் தெரிவிக்கும் பொருட்டு தினசரி நாளிதழில் அறிவிப்பினை வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.4347/–ஐ மாலை முரசு என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**நகர்மன்ற தீர்மான எண்:** 46 , நாள் 20.05.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.4**

அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–இன்படி 2022–2023–ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டு (01.04.2022) முதல் பொது சொத்துவரி சீராய்வு செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்பேரில் தொடர் நடவடிக்கையாக தேனி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் வாயிலாக நாளிதழ்களில் விளம்பரம் செய்தல், அரசிதழிலில் அறிவிப்பு வெளியிடவும், இதற்கான 16320 வரிவிதிப்புக்களுக்கான சுய மதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கீட்டுத்தாள்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சிட்டு பெறுவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு (மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1297/2022/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 47 , நாள் 20.05.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பொதுசுகாதார பணியான டெங்கு தடுப்பு பணிகள், மலேரியா, கொரோனா தடுப்பு பணிகள், கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு, தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பணிகள், மேலும் பொது சுகாதாரம் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு மற்றும் விளம்பரம் செய்வதற்காகாகவும், கணினி மற்றும் இதர செயல்பாடுகள் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், 2022–23ம் ஆண்டிற்கு செலவுகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ2,00,000/–க்கு (இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.**1663/2022/எச்1**

**நகர்மன்ற தீர்மான எண்:** 48 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.6**

பொது சுகாதாரம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. உரம் தயாரிக்க பயன்படும் மக்கும் குப்பைகள் தவிர ஏனைய திடக்கழிவுகள் அனைத்தும் நகராட்சி சொந்தமான அய்யனார்புரம் கலவை உரக்கிரடங்கில் கொட்டி வைக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு கொட்டி வைக்கப்பட்ட குப்பைகள் நிறைந்து விட்டபடியால், மேற்படி குப்பைகளை ஒதுக்கி அப்புறப்படுத்திட வேலைக்கு **21.04.2022** ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகள் அகற்றும் பணிகள்</u>**

| வ. எண் | வேலையின் விவரம் | கால அளவு | விலை | |
|---|---|---|---|---|
| | | | ஆர்.பரமானந்தன் | கே.வனராஜ் |
| 1. | JCB இயந்திரம் | 1 மணி நேரம் | 1300 | 1400 |

குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.பரமானந்தம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண்.1205/2022/எச்1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 49 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க தீர்மானிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் கூடக்கூடிய இடங்கள், நீர்நிலை பகுதிகள், வடிகால் ஓரங்கள், வழிபாட்டு தளங்கள், சாலை ஓரங்கள் மற்றும் முக்கிய இடங்களில் குப்பைகளுடன் கலந்து பழைய மண் மேடுகள் அசுத்தமாக இருப்பதால் பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட மண்மேடுகளுடன் கூடிய குப்பை கூலங்களை ஒதுக்கி அப்புறப்படுத்திடும் வேலைக்கு **21.04.2022** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிதிளில் துார்வாரும் பணிகள்</u>**

| வ. எண் | வேலையின் விவரம் | கால அளவு | விலை | |
|---|---|---|---|---|
| | | | ஆர்.பரமானந்தன் | கே.வனராஜ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | JCB இயந்திரம்–1 | 1 மணி நேரம் | 1300 | 1400 |
| 2. | டிராக்டர்–2 | 1 நாள் | 3500 | 3600 |

குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.பரமானந்தன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண்.1206/2022/எச்1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 50 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** 1.வ.எண்.2–இல் காலஅளவு 1 நாள் என்று இருப்பதை நாள் ஒன்றிக்கு டிராக்டர் ஒன்றிற்கு என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது.
2.குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.பரமானநந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க தீர்மானிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head works, Filter Bed, Tank Operator and Leak பணிகள் போன்றவற்றை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.20/2022, நாள்.31.03.2022 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 08.04.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | 0.019% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | 1.32% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:–** 1.மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.019% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2.இந்நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0973/2022/இ2)

**நகர்மன்ற தீர்மான எண்:** 51 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**********

**பொருள் எண்.9**

இந்நகராட்சியில் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, கணினி பிரிவு, சுகாதாரப் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் கணினி வசூல் மையங்களில் கணினிகள், பிரிண்டர்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்படி சாதனங்களுக்கு பராமரிப்பிற்கென ஒவ்வொரு வருடமும் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் 2021–22ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி காலம் முடிவடைந்ததால் இந்த ஆண்டிற்கான (2022–23) பராமரிப்புப் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.44000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1636/2022/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | | 52 , நாள் 20.05.2022 |
| **தீர்மானம்** | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, கணினி பிரிவு, சுகாதாரப் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் கணினி வசூல் மையங்களில் கணினிகள், பிரிண்டர்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்படி கணினிகள், பிரிண்டர்கள் 6 KVA Online UPS மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி 6 KVA Online UPS (Warranty Period) முடிந்துவிட்டபடியால், இந்த ஆண்டிற்கான 2022–23க்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.15000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1637/2022/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | | 53 , நாள் 20.05.2022 |
| **தீர்மானம்** | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.42, நாள்.31.03.2022–இல் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேலும் பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.04.2022ம் அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை (1 எண்ணம சிலிண்டர்) |
|---|---|---|
| 1. | ஸ்ரீசத்யா டைஸ் & கெமிக்கல்ஸ் நிறுவனம் | ரூ.28000/– |
| 2. | பியூப்பில் கெமிக்கல்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | ரூ.28560/– |

**அலுவலகக் குறிப்பு:–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய ஸ்ரீ சத்யா டைஸ் **&** கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2381/2011/இ2)

**நகர்மன்ற தீர்மான எண்:** 54 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*********

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (1 மற்றும் 27 வார்டு தவிர்த்து) உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள குடியிருப்பு வீடுகள் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கழிவு நீர்க்குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள இணைப்புதாரர்களுக்கு கணினியில் எழுப்பப்பட்ட கேட்பின் அடிப்படையில், கேட்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டதில், கீழ்க்கண்ட இணைப்புதாரர்கள், தங்களது குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, கேட்பினை நீக்கம் செய்யுமாறு தெரிவித்துள்ளார்கள்.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | வரி விதிப்பு எண். | தொகை ரூ.பை |
|---|---|---|---|
| 1. | இ.பெருமாள் செட்டியார், வார்டு எண்.7, கதவு எண்.12, சிவராமன் தெரு, சின்னமனூர் | 121/2901 | 7560 |
| 2. | எம்.சாரா பேகம், வார்டு எண்.8, கதவு எண்.53, வடக்குரத வீதி, சின்னமனூர் | 121/3391 | 5760 |
| 3. | எஸ்.எம்.எம்.முகமது சாரீப், வார்டு எண்.8, கதவு எண்.82ஏ, வடக்கு ரத வீதி, சின்னமனூர் | 121/3285 | 5580 |
| 4. | பி.கருப்பையா சேர்வை, வார்டு எண்.18, கதவு எண்.18பி, தினசரி மார்க்கெட் தெரு, சின்னமனூர் | 121/6730 | 7200 |
| 5. | கே.நாகராஜ் சீனிவாசன், வார்டு எண்.19, கதவு எண்.23N/4B, விஸ்வன்குளம், சின்னமனூர் | 121/6972 | 7740 |
| 6. | இ.அருணாதேவி, வார்டு எண்.9, கதவு எண்.269, மெயின் ரோடு, சின்னமனூர் | 121/3461 | 17580 |
| 7. | எஸ்.செல்லத்தாயி, வார்டு எண்.8, க.எண்.7, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, சின்னமனூர் | 121/3007 | 4260 |
| 8. | சி.வெள்ளைச்சாமி, வார்டு எண்.8, க.எண்.6, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3005 | 4260 |
| 9. | டி.நாகலெட்சுமி, வார்டு எண்.8, க.எண்.5, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3004 | 4260 |
| 10. | எஸ்.கிருஷ்ணன், வார்டு எண்.8, க.எண்.4/1, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3393 | 4260 |

| | | | |
|---|---|---|---|
| 11. | எஸ்.வீரப்பன், வார்டு எண்.8, க.எண்.4, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3002 | 4260 |
| 12. | ராஜபாண்டி, வார்டு எண்.8, க.எண்.32ஏ, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3006 | 4260 |
| 13. | டி.சரவண கல்பனா, வார்டு எண்.8, க.எண்.31/1, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3382 | 4260 |
| 14. | வெ.பழனிச்சாமி, வார்டு எண்.8, க.எண்.29, மரப்பேட்டை அண்ணாமலை தெரு, | 121/3030 | 4260 |
| 15. | சபினா பீவி, வார்டு எண்.8, க.எண்.48, வடக்குரதவீதி, சின்னமனூர் | 121/3083 | 4620 |
| 16 | செல்லமணி, வார்டு எண்.8, க.எண்.15, வடக்குரதவீதி, சின்னமனூர் | 121/3052 | 4260 |
| 17 | என்.மாரிமுத்து, வார்டு எண்.9, க.எண்.4, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 396 | 4380 |
| 18 | என்.மாரிமுத்து, வார்டு எண்.9, க.எண்.5, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 397 | 3600 |
| 19 | எம்.என்.பாலசுப்பிரமணியன், வார்டு எண்.9, க.எண்.6, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 398 | 4260 |
| 20 | சா.சர்குண சேகர பாண்டியன், வார்டு எண்.9, க.எண்.7, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 399 | 4260 |
| 21 | எஸ்.சுந்தரவள்ளி, வார்டு எண்.9, க.எண்.18, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 410 | 2900 |
| 22 | காஷ்மீர் லெப்பை, வார்டு எண்.9, க.எண்.21, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 412 | 4260 |
| 23 | சா.சர்குண சேகர பாண்டியன், வார்டு எண்.9, க.எண்.23, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 418 | 4260 |
| 24 | என்.மாரிமுத்து, வார்டு எண்.9, க.எண்.24, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 419 | 4260 |
| 25 | எம்.தர்மராஜன், வார்டு எண்.9, க.எண்.25, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 420 | 4260 |
| 26 | எம்.தர்மராஜன், வார்டு எண்.9, க.எண்.26, தங்கப்பன் தெரு, சின்னமனூர் | 121/009/00 421 | 4260 |
| 27 | ரா.பரணிகுமார், வார்டு எண்.21, க.எண்.75/31, வடக்கு மந்தையம்மன் கோவில் தெரு, சின்னமனூர் | 121/7401 | 5220 |
| மொத்தம் | | | 140300 |

மேற்கண்டவாறு தெரிவித்த இணைப்புதாரர்களின் குடியிருப்புக்கள் குடிநீர் மேற்பார்வையாளர் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி குடியிருப்புகளுக்கு இணைப்புகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி இணைப்புதாரர்களுக்கு தவறுதலாக பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** குடிநீர்ப் பணி மேற்பார்வையாளரின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை நீக்கம் செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 55 , நாள் 20.05.2022

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சிப் பகுதியில் ஏற்கனவே விடுப்பட்டுபோன வார்டு எண்.1 மற்றும் 27 மற்றும் 12 வார்டுகளில் (2,3,4,8,13,14,17,18,19,21,24 மற்றும் 26) உள்ள சில தெருக்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கழிவு நீர்க்குழாய்கள் அமைப்பது விடுபட்டுப் போனதாலும், விடுப்பட்டுப்போன மற்றும் நகரின் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்தவும், எஞ்சிய குடியிருப்புகளுக்கு (மொத்தக் குடியிருப்புகளில் எண்ணிக்கை 12511–இல் கழிவு நீர் இணைப்புகள் வழங்கப்பட்டவை 6491 போக இன்னும் வழங்க வேண்டிய இணைப்புகள் 6020) இணைப்புகள் வழங்க ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பொருட்டு தனியர் கலந்தறிதற்குரியரை (Private Consultant) நியமனம் செய்யவும், மேற்படி தயார் செய்யும் திட்ட அறிக்கையின்படி, மேற்படி திட்டத்திற்காகும் செலவினை முழுமான்யமாக வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** நகராட்சியின் நிதி நிலையினை கருத்திற் கொண்டு விடுபட்டுப் போன பகுதிகளில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கும், மேற்படி திட்ட அறிக்கையின் அடிப்படையில் திட்டத்தினை செயல்படுத்த ஆகும் செலவினத்தை முழு மான்யமாக அரசிடம் பெற்றுத் தரக் கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றத் தீர்மானிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 56 , நாள் 20.05.2022

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.25, கருங்கட்டாங்குளம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தொகை ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள 18.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர், கூடலூர் – 0.20 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் –0.50 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்
3.

**அலுவலகக் குறிப்பு:–** மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், கூடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 57 , நாள் 20.05.2022

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.2, காலனி பள்ளித் தெருவில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தொகை ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள 18.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ்,ஒப்பந்தக்காரர்,சின்னமனூர்–0.20சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் –0.35 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 58 , நாள் 20.05.2022

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர், நகர்மன்றத் தலைவர், நகராட்சி பொறியாளர், கணினி உதவி திட்ட அமைப்பாளர், துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் பொது பிரிவு ஆகிய இடங்களில் உள்ள குளிரூட்டும் சாதனங்களை (Air Conditioner) தொகை ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள 18.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் சின்னமனூர்–0.10 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் –0.20 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 59 , நாள் 20.05.2022

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.9, ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் கோவிலுக்குச் செல்லும் எள்ளுக்கட்டை சாலையினை தொகை ரூ.0.70 இலட்சம் மதிப்பீட்டில் ஜே.சி.பி இயந்திரம் கொண்டு சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ள 18.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் சின்னமனூர்–0.20 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு

2.திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் –0.50 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 60 , நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.11, சந்தைப்புதூர் தெருவில் உள்ள உடைந்த கால்வாய் மற்றும் சிறுபாலம் பழுது ஏற்பட்டு பொது மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. இதனால் போக்குவரத்து மற்றும் கழிவு நீர் செல்வதில் தடை ஏற்பட்டு தொற்று நோய் பரவும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி புதியதாக கழிவு நீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் கட்ட ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 61 , நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மெயின் ரோட்டிற்கு மேற்குப் பக்கத்தில் உள்ள தெருக்களில் கழிவு நீர் சாக்கடைக்கு புதியதாக பைப்லைன் அமைக்கும் பணி தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 18.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் சின்னமனூர்–0.15 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் –0.25 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 62 , நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தையில் மின்விளக்கு வசதி இல்லாத காரணத்தினால் புதன்கிழமை இரவு மற்றும் சந்தை கூடும் நாளான ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் அதாவது சந்தை கூடுவதற்கு முதல் நாள் சரக்குகள் கொண்டு வந்து சேர்ப்பதற்கும் சந்தை முடிவு பெற்று மீதமுள்ள சரக்குகளை உரிய வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கும் வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் இரவு நேரங்களில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே பொது மக்கள் மற்றும் வியாபாரிகளின் நலன் கருதி வாரச்சந்தையில் மின்விளக்கு வசதிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 63, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.21**

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மான்யக் கோரிக்கை அறிவிப்பு 2022–23 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 19.04.2022ம் தேதிய ந.க.20543/2022/தி2–1 எண்ணிட்ட கடிதத்தின்படி, இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய பூங்கா அமைப்பதற்கு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Providing Park arrangements at Lakshmi Nagar-1 (Ward No.B, Block No.7, TS No.11/1) in Chinnamanur Municipality | 35.00 |

| | | |
|---|---|---|
| 2. | Providing Park arrangements at Lakshmi Nagar-2 (Ward No.B, Block No.7, TS No.31/1,2) in Chinnamanur Municipality | 22.00 |
| 3. | Providing Park arrangements at Sivasakthi Nagar-1 (Ward No.A, Block No.14, TS No.10/7) in Chinnamanur Municipality | 19.00 |
| 4. | Providing Park arrangements at Sivasakthi Nagar-2 (Ward No.A, Block No.14, TS No.10/12) in Chinnamanur Municipality | 30.00 |

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலும் மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகையினை முழுமான்யமாக வழங்க வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 64, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.22**

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மான்யக் கோரிக்கை அறிவிப்பு 2022–23 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 19.04.2022ம் தேதிய ந.க.9511/2022/SBM எண்ணிட்ட கடிதத்தின்படி, இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் 3 எண்ணம் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 1 எண்ணம் பொதுக் கழிப்பிடம் ஆகியன மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Repair and Maintenance of Existing community Toilet at Sweeper Colony in Chinnamanur Municipality | 5.00 |
| 2. | Repair and Maintenance of Existing community Toilet at Thiruvalluvar School Street in Chinnamanur Municipality | 3.00 |
| 3. | Repair and Maintenance of Existing community Toilet at Member Mariappan Street in Chinnamanur Municipality | 8.00 |
| 4. | Repair and Maintenance of Existing Public Toilet at Main road in Chinnamanur Municipality | 3.00 |

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலும் மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகையினை முழுமான்யமாக வழங்க வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 65, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.23**

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மான்ய கோரிக்கை அறிவிப்புகளின்படி, இந்நகராட்சியில் உள்ள பழைய தேக்க திடக்கழிவுகளை Bio Mining முறையில் அகற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, வண்ணான்கரடு, அய்யனார்புரம் பகுதியில் அமைந்துள்ள 5.26 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உரக்கிடங்கில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் குவிந்துள்ள 25,900 கனமீட்டர் பழைய தேக்க திடக்கழிவுகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.207.00 இலட்சம் (மத்திய அரசு மான்யம் ரூ.103.60 இலட்சம், மாநில அரசு மான்யம் ரூ.68.38 இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.35.22 இலட்சம்) மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி திட்டத்தினை ரூ.207.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அதாவது மத்திய அரசு மான்யம் ரூ.103.60 இலட்சம், மாநில அரசு மான்யம் ரூ.68.38 இலட்சம் போக மீதி தொகை ரூ.35.22 இலட்சத்தினை நகராட்சி நிதியில் ஈடு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.<br>2.நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 66, நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.24**

சின்னமனூர் நகராட்சியின் முதல் தளத்தில் நகர்மன்ற கூட்ட அரங்கிற்கு தேவையான தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.625160/–ஐ விலைப்புள்ளிதாரர் M/s The Dindigul Lock, Hardware and Steel Furniture Worker's Industrial Co-operative Society Ltd., Ind No.150, Dindigul என்பவருக்கு நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் வழங்க, அவசர அவசியம் கருதி 1920–ம் வருடத்தின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | பதிவு செய்யலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 67, நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.25**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை (1+9) மொத்தம் 10 இயங்கி வருகின்றன. மேற்படி பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவறைகளை நல்லமுறையில் பராமரிக்கும் பொருட்டு அரசாணை (நிலை).77 பள்ளிக்கல்வி (ப.க4C1)த்துறை நாள்.13.04.2015 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 26.10.2017ம் நாளிட்ட ந.க.32050/2016/ஜே2 எண் கடிதத்தில் ஆணைகள் மற்றும் அறிவுரைகள் பிறப்பிக்கப்பட்டன. அதனடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 1 அரசு பள்ளி மற்றும் 9 எண்ணம் (தொடக்கப்பள்ளி 5, நடுநிலைப்பள்ளி 3 மற்றும் உயர்நிலைப்பள்ளி 1 ) நகராட்சிப்பள்ளி ஆக மொத்தம் 10 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தமாக பராமரித்து வந்த நிலையில் 2020 ஆம் ஆண்டு முதல் கொரோனா நோய் தொற்று காரணமாக பள்ளிகள் திறக்கப்படாமல் இருந்த நிலையில் தற்போது பள்ளிகள் அனைத்தும் இயங்கி வருவதாலும், கழிவறைகள் பராமரிக்கவும் தலைமையாசிரியர்களிடம் இருந்தும் மனுக்கள் வந்த நிலையில் மேற்படி பள்ளிகள் பராமரிக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி, தினக்கூலி அடிப்படையில் 10 பள்ளிகள் கழிப்பறைகள் சுத்தம் செய்தல் மற்றும் பள்ளி வளாகத்தில் துப்புரவு பணி மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளுக்கு 16 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.31.00 இலட்சம்/– ஐ கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி செலவினத் தொகையை கல்விநிதியிலிருந்து செலவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 68, நாள் 20.05.2022

**தீர்மானம் :** 1.அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
2.செலவினம் ரூ.31.00 இலட்சம் என்று இருப்பதை "செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.31.00 இலட்சம் என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது"

*******

**பொருள் எண்.26**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.27, அய்யனார்புரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தில் தொகை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள 18.04.2022ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர், கூடலூர் – 0.25 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2.திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.40 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், கூடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 69, நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.27**

சின்னமனூர் நகராட்சியில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனம் வண்டி எண்.TN60S2751 பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலை இருந்ததால், தொகை ரூ.1.50 இலட்சம் உத்தேச செலவினத்தில் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத்தில் 31.03.2022ம் தேதிய தீர்மானம் எண்.36–இன்படி அனுமதி பெறப்பட்டு வாகன பகுது நீக்கும் பணி மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட M/s Automatic Manufactures Pvt Ltd., மூலம் பணி மேற்கொண்டமைக்கு பட்டியலின்படி தொகை ரூ.148028/– M/s Automatic Manufactures Pvt Ltd., நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட M/s Automatic Manufactutures Pvt Ltd., தேனி பணி மனையில் பழுது நீக்கும் பணி மேற்கொண்டமைக்கும், நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 70, நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.28**

மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2977/2019/அ5, நாள்.11.04.2022இன்படி, நகர்மன்றதலைவர் மற்றும் துணைத்தலைவர் அவர்களுக்கு சென்னை, கலைவாணர் அரங்கில் 13.04.2022 ஆம் நாள் பயிற்சி நடைபெற உள்ளதாக விவரம் தெரிவிக்கப்பட்டு பயிற்சியில் கலந்துகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பயிற்சியில் கலந்து கொண்டவகையில் பயணப்படி தொகை ரூ.5360/–யை நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 71, நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.29**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்குவை பறப்பும் முதிர்கொசுவை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட பூச்சியியல் வல்லுநர் ஆகியோர்களின் அறிவுரைப்படி, முதிர்கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் வீடுகளின் உட்புரம் புகை அடிக்கும் (Indoor Fogging Machine), வீட்டின் சுற்றுப் புறங்களில் புகை அடிக்கும் (Thermal Fogging Machine), சாலைகளில் புகை அடிக்கும் (Vehicle Mounted Fogging Machine) மூன்று வகையான இயந்திரங்கள் 3 எண்ணம் புதிதாக வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,90,000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.2980/2022/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்:** 72, நாள் 20.05.2022

**தீர்மானம் :** Vehicle Mounted Fogging Machine மூன்று வகையான இயந்திரங்கள் 3 எண்ணம் என்று இருப்பதை “Vehicle Mounted Fogging Machine ஒரு எண்ணம் என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது”

*******

**பொருள் எண்.30**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் எடுக்க பயன்படுத்தப்படும் 5 நீர் உறிஞ்சு கிணறுகளில் முல்லை பெரியாற்றில் தண்ணீர் அதிகமாக வந்த பொழுது பெரிய கரை உருவாகி தண்ணீர் ஊற்று தடைபட்டு நீர் வரத்து குறைவாக உள்ளது. இதனால் நகர்வாழ் பொது மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே முல்லை பெரியாற்று படுகையில் அமைந்துள்ள 5 நீர் உறிஞ்சும் கிணறு ஒரங்களில் Hitachi இயந்திரம் வைத்து மேடு பள்ளங்களை சரி செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3111/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 73, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.31**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1, கீழப்பூலானந்தபுரம் முக்கிய சாலையில் (NHAI) ஒரம் அமைந்துள்ள கழிவு நீர் கால்வாய் கட்டி சுமார் 20 வருடங்களுக்கு மேல் ஆனதால் பழுது ஏற்பட்டு கழிவு நீர் தேங்கி பொது மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே கழிவு நீர் தேங்காமல் செல்ல புதிதாக கழிவு நீர் கால்வாய் கட்ட ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3110/2022/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 74, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.32**

சின்னமனூர் நகராட்சியில் 2021–2022 ஆண்டு தேனி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொகை ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் கோவில் அருகில் உணவுக் கூடம் கட்டும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி தினகுரல் தினசரி நாளிதழில் 07.04.2022ம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.38000/–ஐ M/s.Dina Kural, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1034/2022/இ1).** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 75, நாள் 20.05.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.33**

நகர்மன்றத் தீர்மானம் எண்.43, நாள்.11.04.2022–இன் படி அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்.30.03.2022 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 வழிகாட்டுதல்களின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் 2022–2023 ஆம் நிதியண்டின் முதல் அரையாண்டு (01.04.2022) முதல் பொது சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

மண்டல அடிப்படை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டமைக்கும் காலிமனையிடத்திற்கு 100 சதவீதம் வரி உயர்வு செய்தமைக்கு ஆட்சேபணைகள் ஏதும்மிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்கு எழுத்து பூர்வமாகவோ / நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சின்னமனூர் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு, பொது சொத்துவரி சீராய்வு குறித்து பொதுமக்கள் அறியும் வகையில் 13.04.2022 ஆம் நாளன்று தினகரன், மதுரை மணி மற்றும் Trinity Mirror ஆகிய நாளிதழ்கள் மற்றும் அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பொது மக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களிடமிருந்து பொது சொத்துவரி / காலிமனை சீராய்வு குறித்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. மேலும், ஒரு கோரிக்கை மனு மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி கோரிக்கை விண்ணப்பத்தில் மார்க்கையன்கோட்டை ரோடு 'A' மண்டலத்திலிருந்து 'C' மண்டலமாக மாற்றம் செய்ய கோரப்பட்டுள்ளது. மேற்படி மார்க்கையன்கோட்டை ரோடு பொது மக்களின் வணிக பயன்பாட்டில் உள்ளதால் கோரிக்கை ஏற்படையதாக இல்லை. எனவே அரசு வழிகாட்டுதலின்படி நகர எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலிமனையிடத்திற்கு 01.04.2022 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும், நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மெற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– நகர்மன்றத் தீர்மனம் எண்.43, நாள்.11.04.2022 இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பினை 01.04.2022 முதல் சொத்துவரி பொது சொத்துவரி / காலினைவரி சீராய்வு மெற்கொள்ள மன்றம் ஊர்ஜிதம் செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 76, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.34**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022–23 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்நகராட்சிக்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணி மேற்கொள்ள (24x7 நேரமும்) பொது மக்களுக்கு குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திட்ட பிரேரனை TUFIDCO அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, திட்ட மதிப்பீடு கன்சல்டன்சி மூலம் தயார் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம்.**

**3.பணியின் அவசர அவசரம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 77, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.35**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 05.04.2022ம் தேதிய ந.க.337/2021/அ3 எண்ணிட்ட செயல்முறை ஆணையின்படி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 2021–22–இன் கீழ் இந்நகராட்சிக்குச் சொந்தமான என்.கே.பி பள்ளி (வானொலி திடல்) அங்கன்வாடி மைய கட்டிடத்தில் சில மராமத்துப்பணிகள் தொகை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.04.2022–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.10 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு குறைவு
2.திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.25 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

அலுவலகக் குறிப்பு:– **மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள பரமத்தேவன்பட்டி திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2870/2021/இ1)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 78, நாள் 20.05.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.36**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 76 எண்ணம் மின்விசைப்பம்புகள் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில் மின்பவர் பம்புகளில் அடிக்கடி பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் தடைபடுவதால் மினிபவர் பம்புகளுக்குத் தேவையான சாட்டர்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின்கீழ் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1303/2021/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 79, நாள் 20.05.2022

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

(ஒம்) R.அய்யம்மாள்
நகர்மன்ற தலைவர்
சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்(பொ)
சின்னமனூர் நகராட்சி.